# குழந்தையைத் தத்தெடுத்தல் - ஓர் இஸ்லாமிய நோக்கு

**SMM. Mazahir**

ஒரு பெண்ணுடன் சட்ட ரீதியான திருமணத் தொடர்பின்றி அவளது பிள்ளையை - அதன் தந்தை யாரெனத் தெரிந்திருந்தாலும் தெரியாவிட்டாலும் - எடுத்து, தந்தை உறவை வழங்கி, வளர்த்தல் **"தத்தெடுத்தல்"** எனப்படும்.

**ஜாஹிலியாக் காலத்தில் தத்தெடுத்தல்**

பிள்ளைகளைத் தத்தெடுத்து வளர்க்கும் பழக்கம் ஜாஹிலியாக் காலத்திலும் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலும் நடைமுறையிலிருந்தது. ஜாஹிலிய்யா சமூகத்தில் பிள்ளைகளை சுவீகாரம் செய்யும் போது அப்பிள்ளையிடம், "**நீ எனது மகன்: எனது சொத்தில் உனக்கு வாரிசுப் பங்குண்டு; அதேபோல் உனது சொத்தில் எனக்கும் பங்குண்டு**" என்று கூறுபவர்களாக இருந்தனர். இதன் மூலம் அப்பிள்ளை தனது சொந்தப் பிள்ளையாக மாறுகின்றது எனக் கொள்ளப்பட்டது. வாரிசுச் சொத்தில் மாத்திரமின்றி திருமணம், விவாகரத்து போன்ற அனைத்து விவகாரங்களிலும் வளர்ப்புப் பிள்ளை சொந்தப் பிள்ளையாகவே கருதப்பட்டது. அக்காலத்தில் வளர்ப்பு மகனின் மனைவியை அவர் இறந்ததும் அல்லது விவாகரத்துச் செய்யப்பட்டதும் வளர்ப்புத் தந்தைக்குத் திருமணம் முடிக்க முடியாது.

**நபியவர்களின் வாழ்வில் தத்தெடுத்தல்**

நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் ஸைத் என்பவரை தத்தெடுத்து வளர்த்து வந்தார்கள். பனூ தை கோத்திரத்தைச் சேர்ந்த ஸைத் தன் தாயாருடன் மாமன்மாரிடத்தில் இருக்கும் வேளையில் அறபுக் கோத்திரம் ஒன்றினால் பறித்துக் கொண்டு வரப்பட்டு, மக்காவில் அடிமையாக விற்கப்பட்டார். அவரை கதீஜா நாயகி (றழி) அவர்கள் வாங்கி வளர்த்தார்கள். முஹம்மத் (ஸல்) அவர்கள் கதீஜா (றழி) அவர்களைத் திருமணம் செய்த பின்னர் அவர் ஸைதை நபியவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினார்கள்.

ஸைதை இழந்த தந்தை ஹாரிஸா மகனுடைய பிரிவால் துயருற்று, கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார். இறுதியில் தனது மகன் மக்காவில் முஹம்மத் (ஸல்) அவர்களிடம் இருப்பதாகக் கேள்வியுற்று, நபிகளாரிடம் வந்து, "நீங்கள் விரும்புகின்ற எப்பொருளையும் பிரதியாகத் தருகின்றேன். எனது மகனை என்னிடம் திருப்பித் தந்துவிடுங்கள்" என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "நாம் ஸைதுக்கு தெரிவுச் சுதந்திரத்தைக் கொடுப்போம். அவர் உங்களுடன் வருவதைத் தெரிவு செய்தால் பிரதியாக எதுவும் தராமல் நீங்கள் அவரை அழைத்துச் செல்லலாம். அவர் என்னுடன் தொடர்ந்து தங்கியிருப்பதைத் தெரிவு செய்தால் அவருக்குப் பகரமாக எதனையும் நான் பெற்றுக் கொள்ளமாட்டேன்" என்றார்கள். ஸைத் நபியவர்களுடன் இருப்பதையே விரும்பினார். அதனால் முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்களிடம் சென்று, "**ஸைத் என்னுடைய மகன் என்பதற்கு சாட்சியாக இருங்கள். என்னுடைய சொத்தில் அவருக்கு வாரிசுரிமை உண்டு. அவருடைய சொத்தில் எனக்கும் உரிமையுண்டு**" என்றார்கள். (இப்னு மர்தவைஹி)

அல்குர்ஆன் இந்த சமூக மரபைத் தடை செய்தது. இதற்குரிய இறைவசனங்கள் படிமுறையாகவன்றி, ஒரே தடவையில் முடிவாகவும் முழுமையாகவும் தடைசெய்து இறங்கின. மதுப்பாவனை போன்று புரையோடிப் போயிருந்த இந்தப் பழக்கத்தை அல்லாஹ் மதுத்தடைச் சட்டங்களைப் போன்று படிப்படியாக இறக்கி, சமூக மாற்றத்தை உருவாக்கவில்லை. மாறாக உடனடியாக இப்பழக்கம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என அல்லாஹ் விரும்பினான்.
இந்த அடிப்படையில் கீழ்வரும் அல்குர்ஆன் வசனங்கள் இறங்கின.

**"...... உங்களுடைய வளர்ப்புப் பிள்ளைகளை உங்கள் புதல்வர்களாகவும் அல்லாஹ் ஆக்கவில்லை. இவை உங்கள் வாய்களால் கூறும் உங்கள் வார்த்தைகளேயாகும். மேலும் அல்லாஹ் உண்மையைக் கூறுகின்றான். அவனே நேர்வழியையும் காட்டுகின்றான். ஆகவே, நீங்கள் (வளர்த்த) அவர்களை,**

**அவர்களுடைய தந்தைகளின் (பெயர்களைக் கூறியே) அழையுங்கள். அதுதான் அல்லாஹ்விடத்தில் மிக நீதமானதாகும். ஆனால், அவர்களின் தந்தைகளை நீங்கள் அறியவில்லையாயின், அப்பொழுது அவர்கள் மார்க்கத்தில் உங்களுடைய சகோதரர்களாகவும் உங்கள் சிநேகிதர்களாகவும் இருக்கின்றனர்....."** (அல்குர்ஆன்; சூறதுல் அஹ்ஸாப்: 04, 05)

இந்த அல்குர்ஆன் வசனங்கள் கீழ்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்டுகின்றன:

- அல்லாஹ் வளர்ப்புப் பிள்ளைகளைச் சொந்தப் பிள்ளையுடைய அந்தஸ்தில் வைக்கவில்லை. இரத்த உறவு வேறு; வளர்ப்பு உறவு வேறு.
- மக்கள் பிள்ளைகளைத் தத்தெடுத்து, தமது பிள்ளைகளாக வளர்த்துக் கொண்டு, பெயர் கூறி அழைப்பது வெறும் போலி வார்த்தைகளாகும். அதில் உண்மையேதுமில்லை.
- வளர்ப்புப் பிள்ளையுடைய தந்தை யாரெனத் தெரிந்திருந்தால் அவருடைய மகன் எனப் பெயரிட்டு அழைக்க வேண்டும். அதுதான் நீதியும் தர்மமுமாகும்.
- வளர்ப்புப் பிள்ளையின் தந்தை யாரெனத் தெரியாவிட்டால் முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்கள் என்றவகையில் பொதுவான சகோதரத்துவத்தையும் சிநேகிதத்தையும் பேண வேண்டும்.

அப்துல்லாஹ் பின் உமர் (றழி) பின்வருமாறு அறிவிக்கின்றார்கள். றசூல் (ஸல்) அவர்களின் அடிமை ஸைத் பின் ஹாரிஸாவை சூறதுல் அஹ்ஸாப் 4ஆம் 5ஆம் வசனங்கள் இறங்கும் வரை **ஸைத் பின் முஹம்மத்** (முஹம்மதின் மகன் ஸைத்) என்றே நாம் அழைத்து வந்தோம். அவ்வசனங்கள் இறங்கிய பின்னர் நபி (ஸல்) அவர்கள் ஸைதை அழைத்து **"நீர் ஹாரிஸா பின் 'ராஹீலின் மகன்"** என்று கூறினார்கள். (புகாரி)

அதேபோன்று ஸைத் (றழி) திருமணம் முடித்து, விவாகரத்துச் செய்திருந்த ஸைனப் (றழி) அவர்களை முஹம்மத் (ஸல்) அவர்கள் திருமணம் செய்தார்கள். வளர்ப்புப் பிள்ளை சொந்தப் பிள்ளையாக முடியாது என்ற தத்துவத்தை விளக்கவே இத்திருமணம் இடம்பெற்றது. ஏனெனில் சொந்த மகன் ஒரு பெண்ணைத் திருமணம் முடித்தால், அதன் மூலம் ஏற்படும் மாமனார் - மருமகள் உறவு தந்தை - மகள் உறவு போன்று நிரந்தர மஹ்ரமிய்யத்தை ஏற்படுத்தும். இஸ்லாமிய ஷரீஅத்தின்படி மகன் மரணித்தாலோ அல்லது அப்பெண்ணை விவாகரத்து செய்தாலோ மாமனார் அந்தஸ்த்தில் உள்ளவருக்கு ஒருபோதும் அவளைத் திருமணம் முடிக்க முடியாது. வளர்ப்புப் பிள்ளையாயின் இந்த நிலை உருவாவதில்லை என்பதற்கு இந்தத் திருமணம் ஆதாரமாக அமைந்தது.

முஹம்மத் (ஸல்) அவர்களும் தத்தெடுத்தல் தடைச்சட்டத்தை வலியுறுத்தி, பின்வருமாறு குறிப்பிட்டார்கள் **"யார் இஸ்லாத்தில் தனது தந்தை அல்லாத ஒருவரை அவர் அறிந்து கொண்டே தனது தந்தை எனக் கூறுவாரோ அவருக்கு சுவர்க்கம் ஹறாமாகிவிடும்"**. (ஹாஷியது இப்னு ஆபிதீன், 02 : 814)

**தத்தெடுத்தல் தடுக்கப்பட்டமைக்கான காரணங்கள்:**

இஸ்லாத்தில் பிள்ளைகளைத் தத்தெடுத்து வளர்த்தல் தடுக்கப்பட்டுள்ளமைக்கு பல காரணங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றைக் கீழ்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

1. இஸ்லாம் இரத்த பந்தம், தந்தை - பிள்ளை உறவு சட்ட ரீதியான திருமணத்தின் மூலமே இடம் பெறுதல் வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளது. தத்தெடுத்த பிள்ளையை சொந்தப் பிள்ளையாகக் கொண்டால், இஸ்லாத்தின் இந்த முக்கிய அடிப்படை தகர்க்கப்பட்டுவிடும்.

2. தத்தெடுக்கப்பட்ட பிள்ளை ஒருபோதும் சொந்தப் பிள்ளையாக முடியாது. அது சொந்தப் பிள்ளை போன்று பார்க்கப்படுகின்றதே தவிர அது உண்மையான உறவுமுறையல்ல. அது ஒரு கற்பனைப் பாத்திரமாகும்.
3. இரத்த பந்தம், திருமண உறவு, பால்குடி உறவு என்பவற்றால் இஸ்லாமிய ஷரீஅத்தில் சில

விளைவுகள் ஏற்படும். இவ்வுறவுகளால் சிலர் திருமணம் செய்யத் தடுக்கப்பட்டவர்களாக மாறுவர். சில உரிமைகளும் கடமைகளும் உருவாகும்.

உதாரணமாக: பராமரிப்பு செலவு பெறல், பாலூட்டல், பராமரிப்புப் பெறல், வாரிசுரிமை பெறல் போன்றன இரத்த பந்தத்தின் மூலம் ஒரு பிள்ளை பெறும் உரிமைகளாகும். தந்தையைக் கவனித்தல், தந்தைக்கு முன்பு மகன் மரணித்துவிட்டால் அவரின் சொத்திலிருந்து வாரிசுரிமை பெறல் போன்றன இரத்த பந்தத்தினால் தந்தை பெறுகின்ற உரிமைகளாகும்.

தத்தெடுத்து வளர்க்கப்பட்ட பிள்ளைக்குச் சாதாரணமாக எந்த உறவும் ஏற்பட மாட்டாது. எனவே, இரத்த, பால்குடி, திருமண உறவுகளால் ஏற்படும் விளைவுகள் எதுவும் இங்கு இடம்பெறாது.

4. பரம்பரை உறவுமுறையைப் பாதுகாத்தல் என்பது குடும்பம் என்ற கட்டடத்தின் அத்திவாரமாகும். தத்தெடுத்து வளர்ப்பதினூடாக அவ்வத்திவாரம் தகர்க்கப்படுவதோடு, அந்நியக் கூறொன்று உரிமையோடு குடும்ப நிறுவனத்தில் நுழைகின்றது. இதனால் குடும்ப ஒழுங்கு சீர்குலைவதோடு, சில போது தகராறுகளும் *சச்சரவுகளும்* குடும்பத்திற்குள் ஏற்படுவதற்கும் இது காரணமாக அமைகின்றது.

5. தந்தை யாரெனத் தெரிந்த பிள்ளையைத் தத்தெடுத்தால் அது வியாபாரமாக அமைந்துவிடுகின்றது. அது பிள்ளையை மானசீனமாகப் பாதிப்பது மட்டுமின்றி, சிறுவர் துஷ்பிரயோகம், உறுப்பு விற்பனை, சிறுவர் தொழில், பயங்கரவாதச் செயற்பாடுகள் போன்ற சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுத்துவதற்குத் துணையாக அமைந்து, பிள்ளையை உடலியல் ரீதியாகவும் பாதிப்புறச் செய்கின்றது.

6. தந்தை யாரெனத் தெரியாத பிள்ளையைத் தத்தெடுத்து வளர்ப்பதை அனுமதிப்பதால் *சட்டரீதியற்ற குழந்தைகள் உருவாகவும் அதிகரிக்கவும் காரணமாகிவிடும். விபச்சாரம்* - அது இருவர் உடன்பாட்டோடு, உடன்பாடின்றி நடைபெற்றாலும் - அதனைப் பெரும் பாவம் எனவும் *சமூகத்தைச் சீரழிக்கக் கூடியது* எனவும் இஸ்லாம் அறுதியிட்டு உறுதியாகக் கூறுகின்றது. தமது பிழையான தொடர்புகளால் உருவாகும் குழந்தைகளுக்கு வாழ்வு கொடுக்க தத்தெடுத்தல் மூலம் வழி பிறப்பதால் சட்டரீதியற்ற குழந்தைகள் அதிகரிக்க வாய்ப்புண்டு. எனவே, பிழையான வழிமுறையில் குழந்தைகள் உருவாவதையும் அதிகரிப்பதையும் தடுக்கும் ஒரு வழிமுறையாக தத்தெடுத்தல் தடைச் சட்டம் அமைந்துள்ளது.

7. ஓர் ஆணும் பெண்ணும் சட்ட ரீதியான திருமணமின்றி, உறவு கொண்டு கிடைக்கும் குழந்தைக்கு சட்ட ரீதியான தந்தை உறவு கிடைப்பதில்லை. அதனால் ஏற்படும் பராமரிப்புச் செலவு, வாரிசுரிமை போன்ற விளைவுகளும் உருவாவதில்லை. அவர்கள் இருவரும் பின்னர் திருமணம் செய்து கொண்டாலும் முன்னர் பிறந்த குழந்தைக்கு இந்தத் தன்மைகள் கிடைக்காது. இதுவே இப்படியாயின், வேறொருவரின் குழந்தையை எடுத்து, தன் குழந்தை என எப்படிப் பராமரிக்க முடியும்?

**தத்தெடுத்தலும் பால்குடி உறவும்**

ஒரு பிள்ளையைத் தத்தெடுத்து, அதற்குத் தாய்ப்பால் ஊட்டினால் அப்பிள்ளை சொந்தப் பிள்ளையாக மாறிவிடும் என்ற நம்பிக்கை சிலரிடம் இருக்கின்றது. இது ஒரு தவறான எண்ணமாகும். ஒரு பிள்ளைக்குப் பாலூட்டுவதன் மூலம் பாலூட்டிய தாயும் அவளது கணவரும் சொந்தத் தாயும் தந்தையுமாக மாற முடியாது. இரத்த உறவைப் போன்ற உறவை பால்குடி உறவு ஏற்படுத்தாது. பால்குடிப்பதன் ஊடாக இரத்த உறவுகளின் விளைவுகளுள் ஒன்றான **திருமணம் முடிப்பதற்குத் தடுக்கப்படல் (மஹ்ரமி உறவு)** என்ற விளைவு மாத்திரமே உருவாகும். அது தவிர சொந்த தந்தை - மகன் உறவு, பராமரிப்புச் செலவு பெறல், வாரிசுரிமை, பெற்றோரைக் கவனித்தல் போன்ற ஏனைய

விளைவுகள் இங்கு ஏற்படுவதில்லை.

**தத்தெடுத்தலும் அநாதைகளை ஆதரித்தலும்**

தத்தெடுத்தல் ஹராம் என்பதன் கருத்து, அநாதைகளை ஆதரிக்கக் கூடாது என்பதோ நாதியற்றவர்களுக்கு உதவி செய்யக் கூடாது என்பதோ அவர்களுக்காகச் செலவு செய்யக் கூடாது என்பதோ அல்ல. அநாதைகளை ஆதரித்தல் அல்குர்ஆனும் அஸ்ஸுன்னாவும் வலியுறுத்துகின்ற ஒரு நற்காரியமாகும். **அநாதைகளை விரட்டுபவன் மார்க்கத்தைப் பொய்ப்படுத்துபவன்** என சூறதுல் மாஊன் குறிப்பிடுகின்றது. (அல்குர்ஆன்; சூறதுல் மாஊன்:02). **"நானும் அநாதையைப் பராமரிப்பவரும் சுவனத்தில் இவ்வாறு இருப்போம்" என நபி (ஸல்) தனது நடு விரலையும் சுட்டு விரலையும் இணைத்துக் காட்டினார்கள்.** (புகாரி)

தத்தெடுத்தல் மூலம்தான் அநாதைகள் பராமரிக்கப்படல் வேண்டும் என்ற சிந்தனையை இஸ்லாம் ஏற்பதில்லை. தந்தையை இழந்த ஓர் அநாதை பராமரிப்பவரின் குடும்பத்திற்குள் நுழையாமல் வெளியிலிருந்து அந்தப் பராமரிப்பைப் பெறுதல் வேண்டும். அநாதைக் குழந்தையை அதனது தாயுடன் அல்லது உறவினர்களுடன் வாழச் செய்து, ஏனைய சமூக அங்கத்தவர்கள் வெளியிலிருந்து உதவி செய்வதையே இஸ்லாம் விரும்புகின்றது. அதுதான் அப்பிள்ளை மானசீகமாகப் பாதிக்கப்படாமல் இருப்பதற்கும் சிறந்த வழியாகும்.

சுனாமி போன்ற பாரிய அனர்த்தங்கள் ஏற்பட்டு, பெரும் எண்ணிக்கையானோர் அநாதைகளானால், அவர்களுக்கென தனியான இல்லங்களுடாக அவர்களைப் பராமரிப்பதே சாலச் சிறந்ததாகும்.

**தத்தெடுத்தலும் கைவிடப்பட்ட குழந்தைகளும்**

வறுமைக்குப் பயந்து, விபச்சாரக் குற்றச்சாட்டுக்குப் பயந்து, சீதனம் போன்ற வேறு காரணங்களினால் குடும்பத்தால் கைவிடப்பட்ட, வீதியில் எறியப்பட்ட, தந்தை யாரெனத் தெரியாத பிள்ளைகளைப் பொறுத்தளவில் அதற்கான சட்டதிட்டங்களையும் இஸ்லாம் எமக்குக் கற்றுத் தருகின்றது.

தந்தை யாரெனத் தெரியாதவர்களை மார்க்கத்தில் சகோதரர்களாகவும் சிநேகிதர்களாகவும் கருதவேண்டும் என்ற சூறதுல் அஹ்ஸாபின் 5ஆம் வசனத்தையும் அடிப்படையாகக் கொண்டே இந்தச் சட்டங்கள் பெறப்பட்டுள்ளன. இவை அறபு நாடுகளில் முஸ்லிம் தனியார் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1. இறந்து போகக் கூடும் என்ற நிலையில் கைவிடப்பட்ட பிள்ளை ஒன்றை ஒருவர் கண்டால் அதனை எடுத்து, கவனிப்பது அவரின் மீது கட்டாயக் கடமையாகும். (பர்ளு ஐன்). அவ்வாறான இக்கட்டான நிலை இல்லையெனில் அதனை எடுத்துப் பராமரிப்பது சுன்னத்தாகும்.

2. கைவிடப்பட்ட குழந்தையைக் கண்டெடுத்தவர் மற்றையோரைவிட அக்குழந்தைக்கு உரித்துடையவர். தீய, மோசமான செயற்பாடுகள் அவரிடம் இருப்பின் நீதிமன்றத்தின் மூலம் வேறொருவர் கையேற்கலாம்.

3. அக்குழந்தையைக் கன்டெடுத்தவர் அதனைப் பராமரித்து, கல்வியூட்டி தேவையானவற்றை வழங்கி வளர்க்க வேண்டும். அவரால் முடியாவிட்டால் அதனை அரசிடம் கையளிக்க வேண்டும்.

4. கண்டெடுத்தவர் தான் உயிர்வாழும் காலத்தில் தான் விரும்பியதை அக்குழந்தைக்கு அன்பளிப்பாக வழங்கலாம். மரணத்தின் பின் தனது சொத்தில் மூன்றில் ஒன்றுக்குட்பட்டதை மரணசாசனமாக எழுதிவைத்து வழங்கலாம்.

5. கைவிடப்பட்ட பிள்ளையிடம் உடமைகள் ஏதும் இருந்தால் அவை அப்பிள்ளைக்கேயுரியன.

கண்டெடுத்தவர் நீதிமன்றத்தின் அனுமதி பெற்று அவற்றை அப்பிள்ளையின் விவகாரங்களுக்காகச் செலவிடலாம். அதனிடம் எதுவுமில்லையாயின் நன்மை கருதி செலவிட முடியும். அல்லது செலவிட்ட அத்தொகையைப் பிள்ளை வளர்ந்து, வசதியானவனாக மாறியதும் மீட்டி வாங்கிக் கொள்ளலாம்.

6. கண்டெடுத்தவரிடம் அக்குழந்தைக்காகச் செலவிட எதுவுமில்லையாயின் அதற்காகச் செலவிடுவது அரசின் கடமையாகும்.

7. வேறொரு நபர் அக்குழந்தையுடனான தனது இரத்த உறவை (தந்தை, தாய், சகோதரன், பாட்டனார் போன்ற) நிரூபித்தால், கண்டெடுத்தவர் அப்பிள்ளையை அவரிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

8. குழந்தை முஸ்லிம் நாட்டில் அல்லது முஸ்லிம் பிரதேசத்தில் கைவிடப்பட்டு இருந்தால் அது முஸ்லிம் எனக் கருதப்படும். (அப்துர் ரஹ்மான் அஸ்ஸாபூனி, நிழாமுல் உஸ்ரா..., பப: 185, 186)

9. எவ்வாறு இருப்பினும் மனிதாபிமானத்தின் அடிப்படையில் கைவிடப்பட்ட குழந்தையை எடுத்து வளர்ப்பதாயினும் குடும்ப உறவைப் பாதிக்காத வகையிலும் (மஹ்ரமி - அஜ்னமி), ஷரீஅத்தின் எல்லைக்குள்ளும் அது அமைய வேண்டும். அது முடியாத பட்சத்தில் அவர்களுக்கென தனியான பராமரிப்பு நிலையங்கள் (இந்தியாவில் இருப்பது போன்று) அரசால் அல்லது தனியாரால் ஸ்தாபிக்கப்பட்டு, அதன் மூலம் அவர்களை வளர்த்தெடுப்பதே மிகவும் சிறந்ததாகும்.

**முடிவுரை**

அநாதரவான குழந்தைகள் பல்வேறு வகைகளில் காணப்படுகின்றனர். சட்டரீதியான திருமணம் முடித்த, மிகவும் வறுமையான பெற்றோர்களின் குழந்தை, தந்தையை இழந்த அநாதை, பால்குடி உறவு மூலம் வளர்ந்த பிள்ளை, தந்தையோ குடும்பத்தினரோ யாரெனத் தெரியாத நிர்க்கதியான பிள்ளை, தத்தெடுக்கப்பட்ட பிள்ளை என அவற்றைப் பிரித்து நோக்கலாம். ஒவ்வொரு வகையினருக்கும் வெவ்வேறான சட்டதிட்டங்களும் அதனால் ஏற்படும் விளைவுகளும் காணப்படுகின்றன என்பதைக் கருத்திற் கொண்டே முஸ்லிம் சமூத்தில் வாழும் அங்கத்தினர்களின் வாழ்க்கைமுறை அமைதல் வேண்டும். அது குடும்ப உறவில் விரிசல்களை ஏற்படுத்தாமலும் சமூகக் கட்டுக்கோப்பை பேணுவதாகவும் அமைவதே மனிதனின் இம்மை, மறுமை வெற்றிக்கு வழிகோலும்.

**உசாத்துணைகள்:**


1. அல்குர்ஆன்
2. ஸஹீஹுல் புகாரி
3. அஸ்ஸாபூனி அ.ர. (2001) நிழாமுல் உஸ்ரா வஹல்லு முஷ்கிலாதிஹா பீ லௌஇல் இஸ்லாம், பெய்ருத்: தாருல் பிக்ர் அல்முஆஸிர்
4. ஜைனுல் ஹுஸைன், எம்.எப். "தத்தெடுத்து வளர்ப்பது பற்றி இஸ்லாமியத் தீர்ப்பு" இஸ்லாமிய சிந்தனை: 29.01, பப. 45-48, பேருவளை: நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணிப்பகம்